Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

மலர் Volume : 01 | இதழ் Issue : 072 | வியாழக்கிழமை Thursday | 11.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# டெல்லியில் ஜனாதிபதி திரவுபதி முர்முவுடன் முதலமைச்சர் விஜய் சந்திப்பு



டெல்லியில் 11-ந்தேதி) பிரதமர் மோடி தலைமையில் நிதி ஆயோக் கூட்டம் நடைபெறுகிறது.

இதில் நாட்டின் அனைத்து மாநில முதல்-மந்திரிகளும் பங்கேற்க உள்ளனர். இந்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக தமிழக முதல்-அமைச்சர் விஜய் இன்று காலை 10 மணியளவில் சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் டெல்லி புறப்பட்டுச் சென்றார்.

டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்திற்கு சென்ற அவர், காவல்துறை வழங்கப்பட்ட மரியாதையை ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து டெல்லி ஜனாதிபதி மாளிகைக்குசென்றமுதல்-அமைச்சர் விஜய், ஜனாதிபதி திரவுபதி முர்முவை சந்தித்து பேசினார். மரியதை நிமித்தமாக இந்த சந்திப்பு நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தமுறைமுதல்-அமைச்சர் விஜய் டெல்லி சென்றபோது பிரதமர் மோடியை மட்டும் சந்தித்துவிட்டு சென்னை திரும்பினார்.

அந்த வகையில், தமிழகத்தின் முதல்-அமைச்சராக பதவியேற்ற பிறகு முதல் முறையாக இன்று ஜனாதிபதியை விஜய் சந்தித்துள்ளார். தொடர்ந்து துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணனை முதல்-அமைச்சர் விஜய் சந்தித்து பேசினார்

டெல்லியில் இருந்து 12ம் தேதி தனி விமானத்தில் புறப்பட்டு, முதலமைச்சரின் தனிப்பட்ட பயணமாக கர்நாடக மாநிலம் மங்களூரு செல்கிறார். பின்பு அங்கிருந்து மீண்டும் தனி விமானம் மூலம், 12ஆம் தேதி மாலை 6 மணியளவில் சென்னை திரும்பவுள்ளதாக கூறப்படுகிறது.

முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் விஜய், முதன்முறையாக கடந்த மே 27ஆம் தேதி டெல்லி சென்றபோது பிரதமர் மோடி மற்றும் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரை மட்டும் சந்தித்துவிட்டு, மறுநாள் சென்னைக்கு திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இயக்குநர் பாரதிராஜா உடலுக்கு அரசு மரியாதை





## அஞ்சலிக்கு பின் முதலமைச்சர் விஜய் அறிவிப்பு

சென்னை:

திரைத்துறையில் பாரதிராஜாவின் பங்களிப்பைப் போற்றி, அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது இறுதிப் பயணத்திற்கு அரசு மரியாதை வழங்கப்படும் என்று முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் :

"தமிழ்த் திரையுலகின் இயக்குநர் இமயம் பாரதிராஜா காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த மன வேதனையும் துயரமும் அடைந்தேன்.

கிராமியப் பின்னணியில் வாழ்வியல் உயிரோட்டத்துடன் பல வெற்றிப் படங்களை உருவாக்கி, தமிழ்த் திரைப்பட உலகில் தனக்கு என தனி முத்திரை பதித்தவர் இயக்குநர் பாரதிராஜா. தனது படைப்புகளுக்காக நாட்டின் உயரிய விருதான பத்ம ஸ்ரீ உள்ளிட்ட பல்வேறு தேசிய, மாநில விருதுகளைப் பெற்றவர். பல தலைமுறைக் கலைஞர்களை உருவாக்கிய அவரது பங்களிப்பு தமிழ்த் திரைப்பட வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

இயக்குநர் இமயம் பாரதி ராஜாவின் மறைவு, தமிழ்த் திரையுலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், திரைப்படத் துறையினருக்கும், ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன். திரைத்துறையில் பாரதிராஜா அவர்களின் பங்களிப்பைப் போற்றி, அஞ்சலிசெலுத்தும்வகையில் அவரது இறுதிப் பயணத்திற்கு அரசு மரியாதை வழங்கப்படும்." என்று முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

முன்னதாக, நீலாங்கரை இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த இயக்குநர் பாரதி ராஜாவின் உடலுக்கு முதல்வர் விஜய் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

வயது மூப்பு காரணமாக கடந்த சில மாதங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இயக்குநர் பாரதிராஜா காலாமானார்.

சென்னை நீலாங்கரையில் உள்ள இல்லத்தில் இயக்குநர் பாரதிராஜா (84) இன்று காலமானார். அவரது உடலுக்கு முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து பாரதிராஜா குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். அவருடன் முன்னாள் அமைச்சர் மா.சுப்ரமணியன்,டி.ஆர். பாலு எம்பி ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். மேலும் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதள பக்கத்தில் பாரதிராஜாவிற்கு இரங்கல்தெரிவித்துபதிவிட்டுள்ளார்.

அதே போல் பாரதிராஜா மறைவிற்கு மதிமுக பொதுச் செயலாளர் வைகோ இரங்கல் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில், "திரை உலகின்ஈடிலாபேரொளி அணைந்து விட்டது. ஆனால், அந்த ஒளி வெள்ளத்தின் பிரகாசம் இருளையும், இரவுகளையும் கடந்து இன்னும் பன்னூறு ஆண்டுகளுக்கு ஜொலித்துக் கொண்டே இருக்கும்.

தென்பாண்டி மண்டலத்தின் உயிர் நாதமான கிராமங்களை வெட்டரிவாளும், வேளும் தாங்கிய வீரதமிழ்க்குலத்தின் மகத்தான மாண்பினை தலை கவிழாத தன்மானத்தை, ஓடும் சிற்றாறுகளின் சல சலப்பை பண்டுதொட்டு திகழ்ந்த தமிழனின் கலாச்சாரத்தை இமயத்தின் உச்சியில் நட்டு வைத்த கலை உலகின் முடிசூடா வேந்தன், நான் உயிராக நேசித்த பாரதிராஜா எனும் உன்னதப் படைப்பாளி ஐயோ போய்விட்டாரே. அந்த இடத்தை நிரப்புவதற்கு எக்காலத்திலும் எவராலும் இயலாது.

'16 வயதினிலே' என்ற திரைப்படம் வாலிப நெஞ்சங்களை காதல் எனும் மயிலிறகால் வருடியது. அத்திரைப்படம் முடியும் போது கண்கள் கோர்த்த நீருடன், கனத்துப் போன இதயத்துடன், கொட்டகையை விட்டு வெளியேறினோம். கிழக்கே போகும் ரயிலில், காதல் உலகத்தை வலம் வந்தோம். புதிய வார்ப்புக்களில் நெஞ்சம் சிலிர்த்தோம். மண் வாசனையில் அரிவாளின் கூர்மையைத் தடவிப் பார்த்தோம். சிகப்பு ரோஜாக்களில் மர்ம பட மன்னன் ஹிட்ச்காக்கின் ஆளுமையை மீறல் கண்டோம்.

உலகிலேயே ஈடிலா நடிப்புலகின் விரிவானம் சிவாஜி கணேசனை மறு உயிர்ப்பாக முதல் மரியாதையாகசந்தித்தோம். பட்டிக்காடுகள் வெள்ளித் திரையில் பட்டணப் பிரவேசம் செய்வதைக் கண்டு பூரித்தோம். கடலோர கவிதைகளின் காதல் உணர்வில் உருகிப் போனோம். புதுமைப் பெண் படைப்பில் தமிழ்ப் பெண் புதுமைகண்ணகியாக சீறி எழுந்ததைக் கண்டு வியந்தோம். தமிழ்த்திரை உலகத்தின் போக்கை தலைகீழாகப் புரட்டிப் போட்ட புதிய கலை உலகை தரிசித்தோம்.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# அதிரடியாக சரிந்த தங்கம் விலை சவரனுக்கு ரூ.3200 குறைவு



சென்னையில் தங்கம் வாங்குவோருக்குபெரும் நிம்மதியை அளிக்கும் வகையில் ஆபரணத்தங்கத்தின் விலை கணிசமாகக் குறைந்துள்ளது. கடந்த சில வாரங்களாக தொடர்ந்து ஏற்றத்தைக் கண்ட தங்க விலை, இன்று திடீரென சரிந்துள்ளதால் நகை வாங்கத் திட்டமிட்டிருந்த பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அதன்படி,ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.3,200 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,10,400-க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும், கிராமுக்கு ரூ.400 குறைந்ததைத் தொடர்ந்து, ஒரு கிராம் தங்கம் ரூ.13,800 என்ற விலையில் விற்பனையாகி வருகிறது.ஒரே நாளில் ஏற்பட்டுள்ள இந்த குறிப்பிடத்தக்க சரிவு, தங்க சந்தையில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச சந்தையில் தங்கத்தின் மீதான முதலீட்டு தேவை குறைந்திருப்பது, அமெரிக்க டாலரின் மதிப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், சர்வதேச பொருளாதார சூழ்நிலைகளில் காணப்படும் முன்னேற்றம் மற்றும் மத்திய வங்கிகளின் பணவியல் கொள்கைகள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் தங்க விலையில் இந்த சரிவு ஏற்பட்டுள்ளதாக சந்தை வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். உலகளவில் பாதுகாப்பான முதலீடாக கருதப்படும் தங்கத்தின் விலை, பங்குச் சந்தை மற்றும் கச்சா எண்ணெய் விலைகளின் போக்கையும் பொறுத்து அடிக்கடிமாற்றமடைந்து வருகிறது. குறிப்பாக திருமணங்கள், நிச்சயதார்த்தங்கள் மற்றும் பிற விசேஷ நிகழ்ச்சிகளுக்காக தங்க நகைகள் வாங்கத் திட்டமிட்டிருந்த குடும்பங்களுக்கு இந்த விலை குறைவு சாதகமானதாக பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக சென்னையின் முக்கிய நகைக் கடைகளில் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கக்கூடும் என வணிகர்கள் எதிர்பார்க்கின்றனர். கடந்த சில மாதங்களாக தங்கத்தின் விலை வரலாறு காணாத உச்சத்தை எட்டியிருந்த நிலையில், தற்போதைய சரிவு வாங்குபவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது.

இதற்கிடையில்,வெள்ளியின் விலையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை பொதுமக்கள் ஆர்வத்துடன் கவனித்து வருகின்றனர். இருப்பினும், தங்கத்தின் விலை எதிர்வரும் நாட்களில் மீண்டும்ஏற்றம்அல்லது இறக்கத்தை சந்திக்கலாம் என்பதால், முதலீட்டாளர்கள் மற்றும் நகை வாங்குவோர் சந்தை நிலவரத்தை தொடர்ந்து கண்காணித்து முடிவெடுக்க வேண்டும் என்று நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளனர். தங்க விலையின் இந்த திடீர் சரிவு, நகை விற்பனைத் துறைக்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்துவதோடு, பொதுமக்களிடையேயும் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்
DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தங்க நகை உயர்வால் நகை உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் அரசுக்கு வழங்கப்படும் பரிந்துரைகள் குறித்த ஒருங்கிணைந்த அறிக்கை வெளியிட்ட தங்க நகை உற்பத்தியாளர் சங்கத்தினர்



கோவை உப்பிலிபாளையம்பகுதியில்உள்ள பத்திரிகையாளர் மன்றத்தில் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசிய. கோயம்புத்தூர் தங்க நகை உற்பத்தியாளர்கள் சங்கத்தினர்..

தங்க நகை உயர்வால் நகை உற்பத்தியாளர்கள் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்சனைகள், மற்றும் அரசுக்கு இதனால் வழங்கப்படும் பரிந்துரைகள், குறித்த ஒருங்கிணைந்த அறிக்கையை வெளியிட்டனர். தொடர்ந்து செய்தியாளர்களைசந்தித்துபேசிய பட்டயக்கணக்காளர் நாகராஜ் சுரி நாராயன், மற்றும் முத்து வெங்கட் ஆகியோர்கூறியதாவது..

கடந்த சில நிதி ஆண்டுகளில் தொடர்ந்து சர்வதேச மற்றும் உள்நாட்டு தங்கத்தின் விலை மிக கடுமையாக வளர்ந்து வருகின்றது. வெறும் 3 ஆண்டுகளில் தங்கத்தின் விலை 146 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. தங்கம் என்பது ஒரு சாதாரண நுகர்வு பொருள்களை போன்றது அல்ல, அதன் மதிப்பு சர்வதேச பொருளாதாரப் போக்குகளுக்கு ஏற்ப மாறக்கூடியது. இந்த எதிர்பாராத விலை உயர்வு, உற்பத்தி துறையில் குறிப்பாக நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களிடையே கடுமையான செயல்பாட்டு மூலதன நெருக்கடியையும் தொழிற்சாலை ஆபத்துகளையும் ஏற்படுத்தி வருகின்றது. கடந்த 10 ஆண்டுகளில் தங்கத்தின் விலை கணிசமாக உயர்வை சந்தித்து உள்ளதால், 2026 நிதியாண்டின் இறுதியில் அதிகபடியாக 64.56 சதவிகிதம் வருடாந்திர விலை உயர்வும் பதிவாகியுள்ளது. இது தங்கம் ஒரு பாதுகாப்பான நீண்ட கால முதலீடு என்பதை உறுதி செய்தாலும் நகை உற்பத்தியாளர்களுக்கு, பல்வேறு சவால்களை ஏற்படுத்தி வருகின்றது. எனவே தங்க நகை உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் உண்மையான மற்றும் பல்வேறு சிரமங்களை கருத்தில் கொண்டு பொதுமக்கள் மற்றும் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும், தங்க நகை விலை உயர்வால், பாதிக்கப்பட்டுள்ள இந்த துறைக்கு உடனடியாக நிவாரணம் கிடைப்பதற்காக நிதி அமைச்சகம், மற்றும் வருவாய் துறை அமைச்சகத்தின், கவனத்திற்கு இத்தகைய கோப்புகளை தெரிவிப்பதாக அவர்கள் தெரிவித்தனர். தங்கநகை உற்பத்தி துறை தற்போது எதிர்கொள்ளும்நெருக்கடியை உணர்ந்து, உடனடி நிவாரணம் வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுமாறு தமிழக அரசுக்கு தங்க நகை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.




# கோவை மாவட்டம், பேரூர் பகுதியில் நடைபெற்ற தற்காப்பு கலை பயிற்சி முகாம் மற்றும் பல்வேறு தேசியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது

கோவை பேரூர் பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் தி கோல்டன் ஸ்டார்ஸ் அகாடமியின், சார்பாக, ஒரு நாள் பயிற்சி முகாம் மற்றும் தற்காப்புக் கலையில் பல்வேறு தேசிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் அகாடமியின் நிறுவனர் மற்றும் தலைமை பயிற்சியாளர் சென்சாய் சதீஸ், மற்றும் துணைத்தலைவர் சேகர், மற்றும் செயலாளர் சபரிஸ், துணைச் செயலாளர் பால மணிகண்டன் ஆகியோர் விழாவுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக பேரூர் பேரூராட்சி, 12வது வார்டு முன்னாள் கவுன்சிலர் பேரூர் மயில், தமிழக வெற்றிக் கழகம் தெற்கு ஒன்றிய செயலாளர் விஜய் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினர். தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டு வருங்காலத்தில் மிகச்சிறந்த மாணவராகவும் சிறந்த விளையாட்டு வீரராகும் உருவாக மாணவ மாணவியர்கள், தற்காப்பு கலைகளுக்கு முக்கியத்து வம் அளிக்க வேண்டும் எனவும், அதனை பெற்றோர்கள் ஆதரித்து மாணவர்களை ஊக்க படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார் தலைமை பயிற்சியாளர் சென்சாய் சதீஸ் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் பாராட்டு விழா நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.



ஆவுடையானூர் ஊராட்சிசின்னநாடாரூர் இந்து நடுநிலைப்பள்ளி அருகில் சாக்கடை கழிவுநீர் பல மாதங்களாகதூர் வாரப்படாமல் தேங்கி நிற்கிறது.இதனால் டெங்கு மலேரியா போன்ற பெரும் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

★கழிவுநீர் பல மாதங்களாக தூர்வாரப்படாமல் தேங்கி நிற்பதால் பள்ளி செல்லும் மாணவ மாணவியரின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது மேற்படி சின்னநாடாரூர் இந்து நடுநிலைப்பள்ளி செல்லும் மாணவ மாணவியர் & பொதுமக்கள் நலன் கருதி உடனடியாக ஆவுடையானூர் ஊராட்சி நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

# கீழடியில் முதன்முறையாக கைப்பிடியுடன் கூடிய செந்நிற சுடுமண் பானை கண்டெடுப்பு!



சிவகங்கை: கீழடி அகழாய்வின்போது முதன்முறையாக கைப்பிடியுடன் கூடிய செந்நிற சுடுமண் பானை கண்டெடுக்கப்பட்டிருப்பது தொல்லியல் ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

கடந்த மார்ச் 18- ஆம் தேதி முதல் சிவகங்கை மாவட்டம், கீழடியில் கஜேந்திரன் என்பவருக்குச் சொந்தமான ஒன்றரை ஏக்கர் நிலத்தில் 11- ஆம் கட்ட அகழாய்வுப் பணிகள் தொல்லியல் துறையினரால் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதுவரை இங்கு மொத்தம் 7 குழிகள் தோண்டப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதைய அகழாய்வில் பண்டைய தமிழர்களின் வாழ்வியலைப் பறைசாற்றும் வகையில் ஏராளமான பொருட்கள் கிடைத்துள்ளன. குறிப்பாக, செங்கல் கட்டுமானங்கள் மற்றும் கழிவுநீர் வாய்க்கால்கள், சுடுமண் சாயகிண்ணங்கள் மற்றும் தக்கழிகள் (நூல் நூற்கும் கருவி), பல்வேறு வகையான பாசிகள் மற்றும் சுடுமண் பானைகள் கிடைத்துள்ளன. அந்த வகையில், தற்போது 11-ஆம் கட்ட அகழாய்வில் முதன்முறையாக கைப்பிடியுடன் கூடிய செந்நிற சுடுமண் பானை கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த கைப்பிடி பானை தொல்லியல் துறையினரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.



# சதுரங்கம் அறிவாற்றலை வளர்க்கும் சிறந்த விளையாட்டு தேவகோட்டையில் பள்ளி மாணவர்களுக்கு சதுரங்க பயிற்சி அறிமுகம்

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் உள்ள சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் மாணவர்களின் சிந்தனைத் திறன், நினைவாற்றல் மற்றும் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்தும் நோக்கில் சதுரங்கப் பயிற்சி அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். ஆசிரியை முத்துலெட்சுமி வரவேற்புரை வழங்கினார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட செஸ் பயிற்சியாளர் சிவசங்கரி, மாணவர்களுக்கு சதுரங்க விளையாட்டின் அடிப்படை விதிமுறைகள், சதுரங்கப் பலகையின் அமைப்பு, ராஜா, ராணி, யானை, குதிரை, கோட்டை மற்றும் சிப்பாய் உள்ளிட்ட காய்களின் நகர்வுகள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் குறித்து விரிவாக விளக்கினார்.

மேலும், சதுரங்கம் ஒரு விளையாட்டு மட்டுமல்லாமல், பொறுமை, கவனக்குவிப்பு, திட்டமிடல் திறன் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனை வளர்க்கும் அறிவுசார் பயிற்சியாகும் என்றும் அவர் தெரிவித்தார். மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பல்வேறு கேள்விகளை எழுப்பினர். அவர்களின் சந்தேகங்களுக்கு செஸ் பயிற்சியாளர் சிவசங்கரி விளக்கமான பதில்களை வழங்கினார்.

இந்தப் பயிற்சி மூலம் மாணவர்கள் சதுரங்கத்தின் நுணுக்கங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றதுடன், எதிர்கால போட்டிகளில் பங்கேற்கும் ஆர்வமும் அதிகரித்துள்ளது.

நிகழ்ச்சியின் நிறைவில் ஆசிரியர் ஸ்ரீதர் நன்றி கூறினார்.

# அச்சிறுப்பாக்கம் அருகே அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்

## மாநிலங்கவை உறுப்பினர் தனபால் பங்கேற்று ஆலோசனை வழங்கினார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் அதிமுக சார்பில் தனியார் திருமண மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் டாக்டர் ரங்கராஜன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ் ஆறுமுகம், மாநிலங்கவை உறுப்பினர் தனபால், தேர்தல் பொறுப்பாளருமான கழக அமைப்பு செயலாளர் வாலாஜாபாத் கணேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கனிதா சம்பத், கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகளை குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது வரவிருக்கும்

இடைத்தேர்தலில் எடப்பாடியார் அவர்கள் யாரை மதுராந்தகம் தொகுதியில் வேட்பாளராக அறிவிக்கிறாரோ அவரை வெற்றி பெற செய்வோம் என உறுதி ஏற்றனர் அனைத்து உலகை எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் அனந்தமங்கலம் சுப்பிரமணியம் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் ஆனூர் பக்தவச்சலம், ஒன்றிய நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# தூத்துக்குடியில், மாவட்ட கைப்பந்து கழகத்தின் சார்பில் 27வது அகில இந்திய கைப்பந்து போட்டிகள்; எஸ்.ஏ.வி. பள்ளி மைதானத்தில் நடந்தது

தூத்துக்குடியில், மாவட்ட கைப்பந்து கழகத்தின் சார்பில் 27-வது அகில இந்திய கைப்பந்து போட்டிகள் எஸ்.ஏ.வி. பள்ளி மைதானத்தில் தொடங்கின.

இப்போட்டியின் தொடக்க விழாவிற்குத் வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் துணைத் தலைவர் ராஜேஷ் சௌந்தரராஜன் தலைமை தாங்கி போட்டிகளைத் தொடங்கி வைத்தார். மாவட்ட கைப்பந்து கழகத் தலைவர் ஜான் வசீகரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கியின் துணைத் தலைவர் கௌதம், கால்டுவெல் மேல்நிலைப்பள்ளி தாளாளர் ரவி ராஜ், சத்யா ஏஜென்சி பொது மேலாளர் வில்சன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நிறைவாக, மாவட்ட கைப்பந்து கழகச் செயலாளர் ரமேஷ் நன்றி கூறினார்.

பெண்கள் பிரிவு: முதலாவதாக நடைபெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் கல்கத்தா கிழக்கு ரயில்வே அணியும், எம்.ஜி. பல்கலைக்கழக (MGU) அணியும் மோதின. இப்போட்டியின் ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடித் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்திய எம்.ஜி. பல்கலைக்கழக அணியினர் 25-23, 25-20, 25-10 என்ற நேர் செட்களில் கணக்கில் கல்கத்தா அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றனர்.




ஆண்கள் பிரிவு: இரண்டாவதாக நடைபெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் டெல்லி இந்தியன் நேவி அணியும், சென்னை எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக (SRM) அணியும் களம் கண்டன. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சென்னை எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக அணியினர் 25-22, 25-23, 25-15 என்ற புள்ளி கணக்கில் இந்தியன் நேவி அணியை வீழ்த்தி வெற்றி பெற்றனர்.

வருகிற 14-ஆம் தேதி வரை மொத்தம் 6 நாட்கள் நடைபெற உள்ள இப்போட்டிகளில், அகில இந்திய அளவில் தகுதி பெற்ற தலைசிறந்த பல ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகள் கலந்துகொண்டு விளையாடி வருகின்றன.

# தூத்துக்குடி மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, அமைச்சர் ஸ்ரீநாத்தை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்



தூத்துக்குடியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, ஆல் இந்தியா சென்ட்ரல் கவுன்சில் ஆஃப் டிரேட் யூனியன்ஸ் (AICCTU) தொழிற்சங்கத்தின் முக்கியத் தலைவர்கள், பொறுப்பாளர்கள்,நிர்வாகிகள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் பல்வேறு முக்கியக் கோரிக்கைகள் அடங்கிய மனுவை அமைச்சரிடம் நேரில் அளித்தனர்.

அந்த மனுவில், "AICCTU தூய்மைப் பணியாளர்கள் தொழிற்சங்கத்தின் தலைவரான பொன்ராஜ் என்பவரை மாநகராட்சி நிர்வாகம் பணிநீக்கம் செய்துள்ள சூழலில், அவரை எவ்வித நிபந்தனையுமின்றி மீண்டும் உடனடியாகப் பணியில் அமர்த்துவதற்குத் தகுந்த சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தூய்மைப் பாரத ஓட்டுநர்கள் மற்றும் பணியாளர்களுக்குச் சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையிலும், இதுவரை அதனை வழங்காமல் இழுத்தடித்து வரும் மாநகராட்சி நிர்வாகம் மற்றும் ஒப்பந்த நிறுவனமான அவர்லாண்ட் நிர்வாகத்தின் மீது உரிய சட்டப்பூர்வ நடவடிக்கைகளைத் துறை ரீதியாக மேற்கொள்ள வேண்டும். தூய்மைப் பணியாளர்களின் பணிப் பாதுகாப்பு, முறையான மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் இதர நலத்திட்ட உதவிகளைத் தொய்வின்றி வழங்க மாநகராட்சி நிர்வாகத்திற்குத் தகுந்த உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். தொழிற்சங்கநிர்வாகிகளின் கோரிக்கைகளைக் கனிவோடு கேட்டறிந்த அமைச்சர், இந்த விவகாரங்கள் தொடர்பாகத் தூத்துக்குடி மாநகராட்சி நிர்வாகம் மற்றும் சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவன அதிகாரிகளிடம் முறைப்படி விசாரணை நடத்தி, பணியாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு விரைவில் உரிய தீர்வு காணத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.



முன்னாள் முதலமைச்சர் திமுக தலைவர் டாக்டர்.கலைஞர் கருணாநிதியின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் உத்தரவின் படி, தூத்துக்குடி மாநகர மாணவரணி சார்பில் ஜார்ஜ் ரோடு பகுதியில் உள்ள கீதா ஜீவன் நகர் அங்கன்வாடி மையத்தில் கலைஞர் கருணாநிதியின் 103வது பிறந்தநாள் விழா கொண்டாப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாநகர மாணவரணி அமைப்பாளர் டைகர் வினோத் தலைமையில் மாநகர துணை அமைப்பாளர்கள் கிங் பாலா, கார்த்திகேயன் முன்னிலையில் அங்கன்வாடி மையத்தில் பயிலும் குழந்தைகளுடன் கேக் வெட்டி கொண்டாடினார். பின்னர் குழந்தைகளுக்கு நோட் புக் பென்சில் போன்ற உபகரங்களைவழங்கினர். இதில் மாநகர மாணவரணி துணை அமைப்பாளர்கள் சத்யா கந்தசாமி, தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் சி.என். அண்ணாதுரை மற்றும் 36வது வார்டு இளைஞர் அணி அமைப்பாளர் விக்னேஷ், அங்கன்வாடி மையத்தில் உள்ள ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இந்தியா கூட்டணியில் இருந்து ஒரு சில கட்சிகள் வெளியேறியதில் எங்களுக்கு கவலை இல்லை 25 கட்சிகள் உள்ளது

## மாணிக்கம் தாகூர் எம்.பி. பேட்டி

பத்திரிக்கை சுதந்திரம் மிக முக்கியமானது பாதுகாக்கப்பட வேண்டும் பழைய அரசுகள் செய்த மிரட்டல்கள் உருட்டல்கள் இருக்காது என்ற நம்பிக்கையில் தான் மக்கள் ஆதரவளித்துள்ளனர் - இது முதல்வர் கவனத்திற்கு செல்ல வாய்ப்பில்லை எம்பி மாணிக்கம் தாகூர் பேட்டி




விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மதுரை பசுமலையில் 7.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பயணியர் நிழற்குடையை எம்பி மாணிக்கம் தாகூர் இன்று மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறும் போது:

தமிழ்நாட்டினுடைய மிக முக்கிய பிரச்சினையாக ஊழல் மற்றும் பெண்கள் பாதுகாப்பு உள்ளது. இதை மையமாகவைத்து விஜய் அவர்கள் தேர்தலில் அறிவித்திருந்தார் சரியாக 30 நாட்களில் அது குறித்து பலமான நடவடிக்கையாக நேரடியாக எஸ்பிக்கு ரிப்போர்ட் பண்ணுகிறஒருபடையை உருவாக்கி இருக்கிறார். சிங்கப் பெண் என்பது ஒரு முதல் முன்னெடுப்பு நாம் அதற்கு பாராட்டுகளை தெரிவிக்க வேண்டும். முதல்வர் சொன்னது போல் பல வருடங்களாக முடங்கி இருந்த சிஸ்டத்தை சரி செய்ய நேரம் எடுக்கும் அதற்கான முயற்சிகளை பாராட்டுகிறோம்.

சிங்கப்பெண் படை அறிமுகம் விழாவில் உருவாக்கப்பட்ட ஏ ஐ வீடியோவில் எழுத்து பிழை இருப்பதாக சமூக வலைதளங்களில் எழும் குற்றச்சாட்டு குறித்த கேள்விக்கு:

எந்த ஒரு முன்னெடுப்புக்கும் இரண்டு பக்கங்கள் இருக்கும் பார்க்கும் பார்வையை பொறுத்திருக்கிறது. வானதி அக்காவை பொறுத்தவரை அவரது பார்வை குறை கண்டுபிடிக்கும் பார்வை பெண்களின் பாதுகாப்பிற்கு முதல் படியாக பார்க்க வேண்டும் அதை விட்டுவிட்டு ஏ ஐயில் எழுத்து பிழை உள்ளது என்பது குற்றம் சொல்வதற்காக சொல்வது. இது நல்ல நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது நொண்டி சாக்க சொல்வது சரியாக இருக்காது.

அரசு கேபிள்களில் பாலிமர், நியூஸ் தமிழ் ஜனம் டிவி முடக்கப்பட்டது குறித்த கேள்விக்கு:

என்னைப் பொறுத்தவரை பத்திரிக்கை சுதந்திரம்மிகமுக்கியமானது பாதுகாக்கப்பட வேண்டும் பழைய அரசுகள் செய்த மிரட்டல்கள் உருட்டல்கள் இருக்காது என்ற நம்பிக்கை தான் மக்கள் ஆதரவளித்துள்ளனர்,இது முதல்வர் கவனத்திற்கு செல்ல வாய்ப்பில்லை ஏனென்றால் அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கை அது சரி செய்யப்பட வேண்டும்.

மூன்று மாதத்தில் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி என முதல்வர் கூறியதாக குறித்த கேள்விக்கு:

பெருந்தன்மையா ஆறு மாசமாக நாங்கள் பேச மாட்டோம் என்று சொன்னார்கள். நம்மளும் பெருந்தன்மை என்று நினைத்து விட்டோம் அதற்கு பிறகு தான் தெரிந்தது பெருந்தன்மையாக இருக்கிறோம் என்றால் அப்படி இருக்க வேண்டும் இல்லையென்றால் முதல் நாளை அடுத்த காலி பண்ணுவோம் என்றால் அப்படி செய்யனும். ஒரு பக்கம் வேற வேஷம் இன்னொரு பக்கம் வேற வேஷம் என்பது சரியாக இருக்காது மக்கள் அறிவாளிகள் தமிழ்நாட்டு மக்கள் சீரியலை விட்டு விட்டு அரசியலுக்கு சென்று விட்டார்கள் அதனால இது மாதிரி தவறுகள் இனிமேல் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

திமுக இந்தியா கூட்டணியில் இருந்து வெளியேறியது தவெக இந்தியா கூட்டணியில் வருகிறதா கேள்விக்கு:

பாராளுமன்ற தேர்தலுக்கான கூட்டணி மோடி, அமித்ஷாவுக்கு எதிரான கூட்டணி என்று உருவாக்கப்பட்டது. ஒன்று சேர்ந்து வந்த கட்சிகளை சேர்த்து விட்டோம். அதற்குப் பிறகு யாரெல்லாம் எம்பி வைத்திருக்கிறார்களோ அவர்கள் இந்தியா கூட்டணியில் சேர்த்தோம். சிலர் கூட்டணியை விட்டு வெளியேறினார் அதெல்லாம் எங்களுக்கு கவலை இல்லை. 25 கட்சிகள் உள்ளது. இந்தியா கூட்டணியை பொறுத்தவரை ஆர் எஸ் எஸ், அமித்ஷா, மோடிக்கு எதிரான கூட்டணி. தவெகாவை பொருத்தவரை எப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருகிறார்கள் அவர்களுக்கு நாங்கள் அழைப்பு விடுப்போம் தமிழ்நாட்டில் தவெக உடன் பலமான கூட்டணியில் உள்ளோம் எங்களிடம் குழப்பம் இல்லை.

டெல்லியில் எங்களுடன் உட்கார்ந்து கொண்டே எங்களை குறை சொல்வார்கள் அதை பொறுமையாக எங்கள் தலைவர்கள் கேட்டுக் கொள்வார்கள் ஜனநாயபூர்வமான அமைப்பு இந்தியா கூட்டணி யாரையும் அவமானப்படுத்துவது கூட்டமே கூட்டாமல் இருப்பது கிடையாது. அடுத்த இரண்டு மாதத்தில் ஐதராபாத்தில் கூட்டம் கூடும். மம்தா பானர்ஜி மட்டும் நடுவுல இந்தியா கூட்டணிக்கு ஒத்துழைக்கவில்லை இப்போது அவர்களே கூட்ட சொல்கிறார்கள் எல்லோரும் சேர்ந்து வந்தால் சந்தோஷம் என்று நினைப்போம்.

தமிழகத்தில் தொடர் மின்வெட்டு குறித்த கேள்விக்கு: மின்சாரத்துறை அமைச்சர் அவருடைய தொகுதியில் இருந்து பேசுகிறோம். மின்வெட்டு சில இடங்களில் நடப்பதாகும் சில காட்சிகளையும் அவர் வெளியிட்டார் அது அதிர்ச்சியான விஷயமாக இருந்தது இப்படி நடவடிக்கை எடுப்பார்களா இவ்வளவு வண்ணத்தோடு திரிவார்களா பதவி போனதுக்கு பிறகு அப்படின்னு சந்தேகமாக உள்ளது ஆனால் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க கூடாது பொதுமக்களுக்கு துன்புறுத்தி எந்த அரசியல் கட்சி செயல்பட்டாலும் லாபம் கிடைக்காது உண்மை வெளிவந்து தான் ஆகும் எல்லா இடத்திலும் சிசிடிவி வைத்திருக்கிறார்கள் இப்படிப்பட்ட சைகைகளை செய்பவர்கள் வாய்ப்பு இழந்தவர்கள் இப்படி செய்யக்கூடாது ஆளுங்கட்சி அவமானப்படுத்தும் முயற்சியை நிறுத்திக் கொள்ள வேண்டும் நிறுத்திக் கொண்டால் அடுத்த தேர்தலில் மரியாதைஇருக்கும்இல்லை இன்னும் மக்களிடம் கோபம்தான் வரும் என்றார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (10.06.2026) ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், சிறுவலூர், வெள்ளாங்கோவில் கிராமம் ஸ்ரீ வேல் மஹாலில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் பல்வேறு அரசுத்துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (10.06.2026) ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், சிறுவலூர், வெள்ளாங்கோவில் கிராமம் ஸ்ரீ வேல் மஹாலில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# கொசு விரட்டிகளை தேடி வரும் கொசுக்கள் ஆய்வில் வெளியான அதிர்ச்சி தகவல்!

கொசுக்களிடம் இருந்து தப்பிப்பதற்காக நாம் பயன்படுத்தும் கொசுவிரட்டிதிரவங்கள் மற்றும் ஸ்ப்ரேக்கள், உண்மையில் கொசுக்களை நம்மிடம் ஈர்க்கும் காரணியாக மாறிவருகின்றன என சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

'ஜர்னல் ஆஃப் எக்ஸ்பெரிமெண்டல் பயாலஜி' (Journal of Experimental Biology) என்ற அறிவியல் இதழில் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆய்வின்படி, கொசு விரட்டிகளில் பொதுவாக பயன்படுத்தப்படும் 'டீட்' (DEET) என்ற வேதிப்பொருளின் வாசனைக்கு கொசுக்கள் பழகிவிடுவதோடு, காலப்போக்கில் அந்த வாசனையை நோக்கி அவை ஈர்க்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

நாம் கொசுக்களை விரட்டுவதாக நினைத்து பயன்படுத்தும் பொருட்கள்,சிலசூழ்நிலைகளில் கொசுக்களை நம்மிடம் வரவழைக்கும் அழைப்பாக மாறிவிடுகின்றன என்பதை இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

கொசு விரட்டி (DEET) என்றால் என்ன?

கடந்த 1946ம் ஆண்டு அமெரிக்க விவசாய துறையின் வேதியியலாளர் ஒருவரால் 'டீட்' (DEET - N,N-diethyl-meta-toluamide) எனப்படும் கொசு விரட்டி முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. தொடக்கத்தில் அடர்ந்த காடுகளிலும் வெப்பமண்டலப் பகுதிகளிலும் பணிபுரிந்த ராணுவ வீரர்களின் பயன்பாட்டிற்காக இது கொண்டு வரப்பட்டது.

மனிதர்களின் உடலிலிருந்து வெளிப்படும் வாசனையை கொசுக்கள் கண்டறிய முடியாதபடி அவற்றின் மோப்ப உணர்வை மழுங்கடிப்பது, அல்லது செடிகளின்வாசனையை போலப் பிரதிபலித்து கொசுக்களை விரட்டுவது என பலவழிகளில் இந்த வேதிப்பொருள் செயல்படுகிறது. இதுநாள் வரை கொசுக்களை விரட்டுவதில் இது ஒரு சிறந்த அரணாக கருதப்பட்டு வந்தது.

சுவரஸ்யமான ஆய்வு:

அமெரிக்காவின் வெர்ஜீனியா டெக் பல்கலைக்கழகம் மற்றும் பிரான்சின் டூர்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இணைந்து இந்த கூட்டு ஆராய்ச்சியை மேற்கொண்டனர். இந்த ஆய்வின் போது, கொசுக்களுக்கு ஒரு குறிப்பிட்ட கூண்டில் வைத்து இருபது விநாடிகள் வெப்பமான ரத்தம் உணவாக வழங்கப்பட்டது.

அந்த உணவை அவை உட்கொள்ளும் கடைசி பத்து விநாடிகளில், 'டீட்' கொசு விரட்டியின் வாசனை அந்த கூண்டிற்குள் செலுத்தப்பட்டது. இந்த நடைமுறை பலமுறை மீண்டும் மீண்டும் செய்யப்பட்டது. இதன் பிறகு, அந்த பகுதிக்குள் வெறும் 'டீட்' வேதிப்பொருளின் வாசனை மட்டும் செலுத்தப்பட்ட போது, அங்கிருந்த அறுபது சதவீதத்திற்கும் அதிகமான கொசுக்கள் அந்த வாசனையை நோக்கி ஆர்வமாக சென்று கடிக்க முயன்றன.



மேலும், இந்த சோதனையில் பங்குகொண்ட ஆராய்ச்சியாளர் ஒருவரின் இரண்டு கைகளில், ஒருகையில்கொசுவிரட்டியும் மற்றொரு கை சுத்தமாகவும் வைக்கப்பட்ட போது, கொசுக்கள் அந்த கொசு விரட்டி தடவப்பட்ட கையை நோக்கியே படையெடுத்தன. இதேபோல், சர்க்கரை உணவை கொண்டும் நடத்தப்பட்ட சோதனையிலும்,கொசுவிரட்டியின் வாசனைவரும்இடத்தை நோக்கியே கொசுக்கள் நகர்ந்தன.

கொசுக்கள் மிகவும் எளிய உயிரினங்களாக இருந்தாலும், தங்களுக்குகிடைக்கும்உணவோடு சுற்றியுள்ள சூழலை தொடர்புபடுத்திபுரிந்துகொள்ளும் புத்திசாலித்தனம் அவற்றுக்கு இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். நாம் கொசு விரட்டியை பயன்படுத்தும் போது, தொடக்கத்தில் அதன் வீரியம் அதிகமாக இருப்பதால் கொசுக்கள் தூரமாக சென்றுவிடுகின்றன. ஆனால், சில மணி நேரங்களுக்கு பிறகு அதன் வாசனையின் வீரியம் குறைய தொடங்குகிறது.

அந்த சமயத்தில் கொசுக்கள் மீண்டும் மனிதர்களை கடிக்க வருகின்றன. அப்போது, அந்த வேதிப்பொருளின் வாசனையையும் தங்களுக்கு கிடைக்கும் ரத்த உணவையும் அவை ஒன்றாக தொடர்புபடுத்தி பழகிக்கொள்கின்றன. நாய் ஒன்றுக்கு உணவு வழங்குவதற்கு முன்பு மணி அடிப்பதைவழக்கமாக கொண்டால், காலப்போக்கில் மணி சத்தம் கேட்ட உடனேயே உணவை எதிர்பார்த்து அந்த நாய்க்கு எச்சில் ஊறும். அதே போன்றதொரு உளவியல் பழக்கத்திற்கு தற்போது கொசுக்களும் ஆளாகியிருப்பதாக பிரான்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் கிளாடியோ லாசாரி விளக்குகிறார்.

இது ஏன் கவலைக்குரிய விஷயம்?

டெங்கு, மலேரியா, சிக்குன்குன்யா மற்றும் ஜிகா வைரஸ் போன்ற கொசுக்களால் பரவும் ஆபத்தான நோய்களை கட்டுப்படுத்த உலகளவில் கொசு விரட்டிகளையே மக்கள் அதிகம் நம்பியிருக்கிறார்கள். ஆனால், இந்த ஆய்வின் முடிவுகள் கொசு விரட்டிகளை மட்டுமே முழுமையாக நம்பியிருப்பது பாதுகாப்பானது அல்ல என்பதை உணர்த்துகின்றன.

எனவே, கொசுக்களிடம் இருந்து நம்மை பாதுகாத்து கொள்ள மாற்று வழிகளையும் நாம் தீவிரமாக பின்பற்ற வேண்டும். வீடுகளை சுற்றி தண்ணீர் தேங்காமல் பார்த்து கொள்வது, ஜன்னல்களில் கொசு வலைகளை பொருத்துவது,

தூங்கும் போது கொசுவலைகளை பயன்படுத்துவது மற்றும் கொசுக்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கும் மாலை நேரங்களில் உடலை முழுமையாக மூடும் வெளிர் நிற ஆடைகளை அணிவது போன்ற பாரம்பரிய பாதுகாப்பு முறைகளை ஒருங்கிணைந்து செயல்படுத்துவதே நோய் பரவலை தடுப்பதற்கான சிறந்த வழியாகும்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (10.06.2026) கோபிசெட்டிபாளையம், வெள்ளாங்கோவில் அங்கன்வாடி மையத்தில் ஆய்வு மேற்கொண்டு, குழந்தைகளுடன் கலந்துரையாடினார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (10.06.2026) கோபிசெட்டிபாளையம் பகுதியில் தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை மூலமாக, தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் 202526 ஆம் ஆண்டிற்கான நிதியாண்டில் நாகதேவம்பாளையம் பகுதியில் உள்ள விவசாயிக்கு ஒரு ஹெக்டர் பரப்பளவில் 42000/ ரூபாய் மதிப்பிலான திசு வளர்ப்பு வாழைக் கன்றுகள் 100% மானியத்தில் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் பணியினை பார்வையிட்டு, விவசாயிடம் கலந்துரையாடினார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (10.06.2026) கோபிசெட்டிபாளையம், நாகதேவம்பாளையம் ஊராட்சி ஒன்றியம், முல்லைநகரில் உள்ள நாற்றுப்பண்ணையினை பார்வையிட்டார்.




ஈரோடு மாவட்ட காவல்துறையின் சார்பில், நேற்று (ஜுன்.10) காலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி தலைமையில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. பொதுமக்களிடம் இருந்து பல்வேறு குறைகள் சார்ந்த கோரிக்கை மனுக்கள் நேரிடையாக பெறப்பட்டு, அந்த மனுக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி, விரைந்து தீர்வு காண உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



ஈரோடு மாவட்டம் ஆனைக்கல் பாளையம் ஆயுதப்படை வளாகத்தில் ஈரோடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி காவல்துறை வாகனங்களை ஆய்வு செய்தார். இரண்டு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்களையும், அதில் பயன்படுத்தப்படும் கருவிகளையும் ஆய்வு செய்தார். மேலும் வாகனங்கள் தகுந்த பயன்பாட்டில் உள்ளனவா எனவும் ஆய்வு செய்தார். கோப்புகளையும் ஆய்வு செய்தார்.

# பா.ஜ.க.வில் இருந்து விலகுவதாக அமர் பிரசாத் ரெட்டி அறிவிப்பு



கர்நாடக மாநிலத்தில் ஐ.பி.எஸ். அதிகாரியாக பணியாற்றிவந்த அண்ணாமலை, பின்னர் பா.ஜ.க.வில் இணைந்து செயல்பட்டார். கட்சியில் சேர்ந்த ஓராண்டிலேயே மாநிலத் தலைவராக உயர்ந்த அவர், கடந்த ஆண்டு அந்தப் பதவியில் இருந்து மாற்றப்பட்டார்.சட்டமன்றத் தேர்தலிலும் தனக்கு சீட் வேண்டாம் என்று மறுத்த அண்ணாமலை, தேர்தல் முடிந்ததும் தனி இயக்கத்தைத் தொடங்கும் திட்டத்தை அறிவித்தார் இந்த நிலையில், பா.ஜ.க. மாநிலச் செயலாளரும், அண்ணாமலையின் நெருங்கிய ஆதரவாளருமான அமர் பிரசாத் ரெட்டி, பா.ஜ.க.வில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.இதுதொடர்பாக தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில் அவர் கூறியிருப்பதாவது:- "ஒரு குடும்பத்தின் கட்டுப்பாட்டில் தி.மு.க. உள்ளது என்றுகூறுகிறோம். ஆனால் தமிழக பா.ஜ.கவும் 4 அல்லது 5 பேரின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது.

தேர்தலில் தோல்வி அடைந்தாலும், அவர்களே மீண்டும் மீண்டும் போட்டியிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். பிறப்பால் நான் தெலுங்கர் என்றாலும், தமிழுக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் தொடர்ந்து பணியாற்றுவேன். விரைவில் அண்ணாமலையின் இயக்கத்தில் இணைய உள்ளேன். எதிர்காலத்தில் அண்ணாமலைக்கும் விஜய்க்கும் இடையில்தான் அரசியல் போட்டி இருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.கடந்த வாரம் ஆன்லைன் வாயிலாக பேசிய அவர், "வி தி லீடர்ஸ்" என்ற புதிய இயக்கத்தை தொடங்கினார். இந்த இயக்கத்தில் இணையவழியாக லட்சக்கணக்கானோர் இணைந்து வருவதாக கூறப்படுகிறது. தமிழக பா.ஜ.கவின் முக்கிய நிர்வாகிகளும் இதில் இணைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# Pakistan military helicopter crash: Mi17 chopper crashes in Muzaffarabad, no survivors, says ISPR



Pakistan Army's aviation wing suffered a major setback on Wednesday after a Mi-17 helicopter crashed near Muzaffarabad during take-off, killing all personnel on board. The military said the helicopter went down due to a suspected technical fault, with rescue and recovery teams rushed to the site soon after the accident.

"All personnel on board embraced martyrdom. There were no survivors," the ISPR said in a statement, according to a Dawn report. The ISPR statement further read that it has ordered a board of inquiry to ascertain the exact technical cause of the accident, said the report.

Chief of the Army Staff Asim Munir and all ranks of the army "express deep grief over the tragic loss of precious lives and extend heartfelt condolences to the bereaved families", the ISPR statement said. The cause of the crash and the exact number of fatalities remain unclear so far. Pakistan has witnessed several military helicopter crashes in recent years. In September 2025, an army helicopter on a routine flight crashed in the country's north, killing two pilots and three technicians on board, the AP reported.

In August 2025, a helicopter of the Khyber Pakhtunkhwa government crashed in the Mohmand district due to bad weather, killing two pilots and three crew members, according to news agency PTI.

# இயக்குநர் பாரதிராஜா உடலுக்கு திரையுலகினர் அஞ்சலி...

## ஸ்டூடியோவை தாண்டி கிராமங்களுக்கு சென்ற கேமரா

## தமிழ் சினிமாவின் பாதையை மாற்றிய பாரதிராஜா









சென்னை: பாரதிராஜா குழந்தையை போன்றவர் என்றும், அவர் மனதில் என்ன நினைத்தாலும் வெளிப்படையாக பேசுவார் என்றும் நடிகர் ரஜினிகாந்த் பேட்டியளித்துள்ளார்.

'இயக்குநர் இமயம்' என்று அழைக்கப்படும் பாரதிராஜா உடல் நலக்குறைவால் சென்னையில் உள்ள தனது இல்லத்தில் இன்று காலமானார். அவரது மறைவு திரைத்துறை யினரை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்நிலையில் பாரதிராஜா உடலுக்கு திரைத்துறையினர் பலர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அந்த வகையில், நடிகர் ரஜினிகாந்த் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய ரஜினிகாந்த், "பாரதிராஜா என்னுடைய 50 ஆண்டுகால நண்பர். அவரது திறமை, சாதனைகள் பற்றி அனைவருக்கும் தெரியும். திரைத்துறையில் பல நடிகர், நடிகைகளை அறிமுகப்படுத்தி அவர்களைதிரையுலகத்தில் வாழ வைத்தவர். அதுமட்டுமின்றி திரைத்துறையினருக்கு எந்த பிரச்சினை வந்தாலும் அவர்களுக்காக குரல் கொடுத்து போராடியவர்.அவருடையபெயர் என்றும் நிலைத்து நிற்கும்.

தனிப்பட்ட முறையில் குழந்தையை போன்றவர் பாரதிராஜா. அவர் மனதில் என்ன நினைத்தாலும் அதை வெளிப்படையாக பேசுவார். என்னைப் பற்றி நிறைய விமர்சனங்களை முன்வைத்துள்ளார். உன்னை எனக்கு பிடிக்கும். ஆனால் உனதுநடிப்பைஎனக்கு பிடிக்காது என்று கூறியுள்ளார்.

அவருடன் இருந்தாலே மகிழ்ச்சியாக இருக்கும். அவரது வெளிப்படைத் தன்மையான குணத்தாலேயே எம்ஜிஆர், கலைஞர், சிவாஜி கணேசன் போன்றோருடன் நட்பாக இருந்தார். அவர் உயிருடன் இருக்கும்போது, அவரை பார்க்க வேண்டும் என கேட்டபோது, அவர் குணமடைந்து விடுவார்; அப்போது வாருங்கள் என கூறினார்கள். ஆனால் இப்போது அவரை உயிருடன் பார்க்க முடியவில்லை. அவர் என்றென்றும் எனது நினைவில் இருப்பார். அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறேன்" என தெரிவித்தார். ரஜினியைத் தொடர்ந்து நடிகர் கமல்ஹாசனும் பாரதிராஜா உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

சென்னை நீலாங்கரையில் உள்ள பாரதிராஜாவின் இல்லத்தில் உடல் வைக்கப்பட்டிருக்கும் நிலையில் பலரும் அங்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர். அந்த வகையில் முதல்வர் விஜய், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர். மேலும் திரைபிரபலங்கள் சிவகுமார், சூர்யா, ராதிகா, வைரமுத்து உள்ளிட்ட பலரும் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.